FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8301834

1. District மாவட்டம் : Madurai PS காவல்நிலையம் : V & AC Year ஆண்டு : 2026 FIR No முதல் தகவல் எண் : 12/2026 Date நாள் : 03.09.202

2. (i) Act சட்டம் : PC Act 1988 as amended Sections பிரிவுகள் : 7(a) of PC Act 1988
(ii) Act சட்டம் : by Prevention of Corruption Sections பிரிவுகள் : amended by PC (Amendm
(iii) Act சட்டம் : (Amendment) Act 2018 Sections பிரிவுகள் : Act 2018.
(iv) Other Acts & Sections மிற சட்டங்களும் பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : Date to நாள் வரை : 01.09.2026 at 12.45 hrs. 02.09.2026 at 11.45 hrs
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 03.09.2026 Time நேரம் : 09.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 03.09.2026 Time நேரம் : 10.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் : Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : Southwest, 18 Kms
Beat Number : முறைக் காவல் எண் :
(b) Address : முகவரி : O/o. Village Administrative Officer, Vedar Puliyankulam, Tirupparankundram Tk, Madurai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல்நிலைய மாவட்டம் : District :

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் : Tr. R. Madhumithran
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Ramachandran
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 12.10.1993
(d) Nationality நாட்டினம் : Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
(f) Occupation : தொழில் : SAP Consultant HCL, Bangalore
(g) Address : முகவரி : 18A, 2nd Cross Street, Kurinji Nagar, Tirunagar, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Yasin Banu, Village Administrative Officer, Vedarpuliyam Village, Tirupparankundram Tk., Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவைபெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைபெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached (pages 3 to 7)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

3/9/2026

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 03.09.2026 11.45 hrs.

Name: பெயர் C. Jeyapriya
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
V & AC, Madurai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 03.09.2026-ஆம் தேதி காலை 09:30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை திருநகர், குறிஞ்சிநகர், 18A, 2வது குறுக்குத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் ராமச்சந்திரன் மகன் திரு.மதுமித்ரன் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் R.மதுமித்ரன், த/பெ.ராமச்சந்திரன், 18A, 2வது குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர், திருநகர், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. அய்யா, நான் மதுரை திருநகரில் எனது மனைவி சாதனா மற்றும் அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் என்ஜினியரிங் முடித்து தற்போது பெங்களூருவில் HCL நிறுவனத்தில் SAP consultant ஆக பணிபுரிந்துவருகிறேன். சொந்த வேலை நிமித்தமாக ஒருவாரம் Work from Home பணி வாங்கி வந்துள்ளேன். நான் கடந்த 05.03.2025ம் தேதி திருப்பரங்குன்றம் தாலுகா, வேடர்புளியங்குளம் கிராத்தில் புஞ்சை ரீசர்வே எண் 62/1ல் வி.பி.சிந்தன் நகர், வைகை சதுக்கத்தில் உள்ள பிளாட் எண்: 137 ல் 2400 சதுரடி காலிமனையிடமும், பிளாட் நம்பர் 136ல் 2400 சதுரடி காலிமனையிடமும் சேர்த்து ஆக இரண்டு பிளாட்டுகளும் சேர்த்து மொத்தம் 4800 சதுரடி காலிமனையிடத்தை மதுரையைச் சேர்ந்த திருமதி.புஷ்பலதா என்பவரிடமிருந்து எனது பெயரிலும், எனது மனைவி சாதனா பெயரிலும் ஒரே பத்திரமாக ஆவண எண் 1427/2026 படி கடந்த 05.03.2025ம் தேதி கிரையமாகப்பெற்று திருப்பரங்குன்றம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிந்துள்ளேன். பத்திரப்பதிவின்போதே மேற்படி சொத்திற்கான பட்டாவை எங்கள் இருவரின் பெயரில் பெயர் மாற்றம் செய்ய மனு செய்ததன்பேரில், அடுத்த மாதமே அதாவது ஏப்ரல் 2025ம் மாதம் எனக்கு பட்டா எண்: 4808 ன்படி பட்டா வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி பட்டாவில் உரிமையாளர் பெயரில் எனது பெயரை சேர்க்காமல் எனது மனைவி சாதனா த/பெ.சுந்தரமூர்த்தி அவர்கள் பெயர் மட்டும் உள்ளவாறு பட்டா வழங்கப்பட்டிருந்தது. எனவே நான் கடந்த 30.07.2026ம் தேதி ஆன்லைனில் பட்டாவிற்கு விண்ணப்பித்திருந்தேன். அன்றைய தினமே "எனது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் பட்டது" என்ற குறுஞ்செய்தி வருவாய் துறையிலிருந்து எனது அலைபேசி எண்-90802 51674-ற்கு வரப்பெற்றது. பின்னர் 11.08.2026ம் தேதி எனது விண்ணப்பமானது கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பரிசீலனைக்கு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்ப்பபட்டுள்ளதாக மற்றொரு குறுஞ்செய்தி எனது அலைபேசி எண்ணிற்கு

அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 13.08.2026ம் தேதி எனது பட்டா மாறுதல் விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்டது எனவும் காரணம் தொடர்பு பத்திரம்/மூலப்பத்திரம் சமர்ப்பிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டு எனது அலைபேசிக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. ஆனால் நான் பட்டா மாறுதல் விண்ணப்பம் பதிவு செய்யும்போதே அதற்குண்டான அனைத்து தொடர்பு பத்திரங்களை இணைத்திருந்தேன். எனவே அன்றையதினமே நான் வேடர்புளியங்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு என்பவரை, எனது செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது இது சம்பந்தமான தொடர்பு பத்திரங்களை அவரது அலைபேசிக்கு அனுப்பிவைக்குமாறும், அதனை அவர் பார்த்துவிட்டு என்னை போனில் அழைப்பதாகவும் கூறினார். அதன்பேரில் நானும் அன்றைய தினமே ஆவணங்களை அவரது செல்போனுக்கு வாட்ஸ் அப் மூலம் அனுப்பிவைத்தேன். ஆனால் நான்கைந்து நாட்களாகியும் என்னை அழைக்காததால் கடந்த 17.08.2026-ம் தேதி நான் மீண்டும் அவரை அலைபேசியில் அழைத்தபோது, என்னை மறுபடியும் புதியதாக ஒருமுறை பட்டாபெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பிக்கச் சொன்னார். அதன்படி நான் ஆன்லைனில் விண்ணப்பிக்க முயன்றபோது எனது பெயரில் ஏற்கனவே ஒரு விண்ணப்பம் நிலுவையில் உள்ளதாக காண்பித்தது. அதனை அப்போதே கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்களிடம் இந்த விபரத்தை சொன்னபோது, அவர் 30.07.2025ம் தேதி நான் விண்ணப்பித்திருந்த எனது பழைய விண்ணப்பத்தை அவரது அலைபேசிக்கு அனுப்பிவைக்கச் சொன்னார். நானும் அதனை அனுப்பிவைத்தேன். ஆனால் அதன்பிறகும் ஒரு நடவடிக்கையும் எனது பட்டா மாறுதல் மனுவின் மீது மேற்கொள்ளப்பட வில்லை. அதன் காரணமாக எனது மனுவின் மீது நடவடிக்கை எடுக்க கேட்பதற்காக நான் கடந்த 31.08.2026ம் தேதி மதுரைக்கு எனது வீட்டிற்கு வந்தேன். மறுநாள் (01.09.2026) மதியம் சுமார் 12:10 மணிக்கு, கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்களை அவரது செல்போன் எண் 90430 57706-ல் அழைத்து எனது பட்டா மாறுதல் மனு குறித்து விபரம் கேட்ட போது, அவர் அப்போது திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் தான் இருப்பதாகவும், அங்கு வந்து அவரை நேரில் சந்திக்குமாறும் கூறினார். அதன்பேரில், மதியம் சுமார் 12:15 மணிக்கு திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகம் சென்று, அங்கிருந்தவர்களிடம் விபரம் கேட்டு, கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்களை சந்தித்த போது, அவர் நீங்கள் இங்கு திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் செயல்பட்டு வரும் இ-சேவை மையத்தில் புதிய பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்யுங்கள், நீங்கள் இ-சேவை மையத்திற்கு சென்று, அங்கிருந்து எனது செல்போனிற்கு அழைத்து, அங்குள்ள கணினி இயக்குநரிடம் போனை கொடுங்கள் நான் அவரிடம் விபரம் சொல்லி விடுகிறேன் என்று

சொன்னார். எனவே, அவர் சொன்னபடி திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் இ-சேவை மையத்திற்கு சென்று அங்கிருந்து, சுமார் 12:20 மணிக்கு, திருமதி. யாசின் பானு அவர்களின் செல்போனுக்கு போன் செய்து, இ-சேவை மைய கணிணி இயக்குநரிடம் கொடுத்தேன். அப்போது, திருமதி. யாசின் பானு அவர்கள் அவருக்கு விபரத்தை சொன்னார். அதன்படி மீண்டும் எனது பெயருக்கும் எனது மனைவி பெயருக்கும் பட்டா மாறுதல் கோரி அந்த இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்தேன். அப்போது எனது பட்டா மாறுதல் விண்ணப்பம் இணைய வழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான குறுஞ்செய்தி எனது செல்போனுக்கு வந்தது. நான் புதிதாக பட்டா மாறுதல் மனு செய்த விபரத்தை மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு ஏற்கனவே என்னிடம் சொல்லியவாறு, அவரை சந்தித்து சொல்வதற்காக சென்ற போது, அவர் ஏற்கனவே இருந்த இருக்கையில் அமர்ந்திருக்கவில்லை. எனவே, அவரை எனது செல்போனிலிருந்து சுமார் 12:45 மணிக்கு தொடர்பு கொண்டு பேசிய போது, அவர் வாகன நிறுத்தமிடத்தில் இருப்பதை கூறினார். அதன்பேரில், திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலக வாகன நிறுத்துமிடத்தில் வைத்து அவரை சந்தித்து அவரிடம் புதிதாக பட்டா மாறுதல் விண்ணப்பம் செய்துள்ள விபரத்தை சொன்ன போது, கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்கள் என்னிடம் அவர்தான் முழுப்புலம் பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு அவர் பரிந்துரைத்து எனது பெயருக்கும், எனது மனைவி பெயருக்கும் சேர்த்து பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்து தருவதற்கு, அவருக்கு ரூ.5,000/-ம் தரவேண்டும் என கேட்டார். அப்போது, நான் அவரிடம் இது அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமா எனக்கேட்டேன். அதற்கு திருமதி. யாசின் பானு அவர்கள் பட்டா மாறுதல் செய்ய அரசு கட்டணம் ஏதும் இல்லை என்றும், ரூ.5,000/- அவரது செலவுக்காக தனியாக தரவேண்டிய பணம் என்றும், பணத்துடன் அவரை அவரது அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்பின்னர், மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்கள் அரசு கட்டணம் ஏதும் இல்லாமல் பட்டா மாறுதல் செய்ய வேண்டிய அரசு வேலைக்கு, லஞ்சமாக பணம் கேட்பது எனக்கு மிகுந்த மனவருத்தமாக இருந்தது. இந்த விஷயத்தை எனது மனைவியிடம் சொன்ன போது அவரும் வருத்தப்பட்டார். பின்னர், நான் அப்போதே, தமிழக அரசு அறிவித்திருந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வாட்ஸ் அப் எண் : 94981 80936-க்கு மேற்படி கிராம நிர்வாக அலுவலர் பட்டா மாறுதல் செய்ய லஞ்சமாக ரூ.5,000/- கேட்ட விபரத்தை புகார் செய்தேன். அதன் பேரில், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயப்பிரியா ஆகிய தாங்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு விபரம் கேட்டீர்கள். பின்னர் அது தொடர்பான

ஆவணங்களை எடுத்துக்கொண்டு அலுவலகம் வருமாறு தெரிவித்து இருந்தீர்கள். நான் 02.09.2026-ம் தேதி வருவதாகக் கூறியிருந்தேன். பின்னர் நேற்று 02.09.2026-ம் தேதி காலை சுமார் 11:45 மணியளவில், நான் வேடர்புளியங்குளம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று அங்கு அலுவலில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்களை மீண்டும் சந்தித்து, எனது பட்டா மாறுதல் குறித்து கேட்ட போது, நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டார். அப்போது, நான் அவரிடம் இல்லை என்றும், பணம் ஏதும் வாங்கிகொள்ளாமல் எங்களுக்கு பட்டா மாறுதல் செய்து கொடுங்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் பணம் இல்லாமல் இங்கு ஒரு வேலையும் நடக்காது. நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கோபத்துடன் கூறிவிட்டு, சரி, நீங்கள் வேண்டுமானால் ஒரு ஆயிரம் ரூபாய் குறைத்துக் கொண்டு ரூ.4,000/- கொடுங்கள் என்றும், அதனை இன்று (03.09.2026)-ம் தேதி மதியம் 03:00 மணிக்கு மேல் திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்திற்கு வந்து செல்போனில் அவரை தொடர்பு கொண்டு பேசி, எங்கு வர வேண்டும் என்ற விபரம் தெரிந்து கொண்டு, அங்கு வந்து அவர் பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்து தருவதற்காக கேட்ட லஞ்சப்பணம் ரூ.4,000/-த்தை கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு கொடுத்தால் தான் பட்டா மாறுதல் செய்ய தனது பரிந்துரையை செய்து, தாலுகா அலுவலகத்திலிருந்து பட்டா கிடைக்க ஏற்பாடு செய்து தர முடியும் என கண்டிப்பாக கூறினார். நான் மேற்படி விபரங்கள் முழுவதையும் எனது மனைவி திருமதி.சாதனா அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவரும், கிராம நிர்வாக அலுவலர் யாசின் பானு அவர்கள் அரசு வேலை செய்ய லஞ்சமாக பணம் கேட்கிறாரே என வருத்தப்பட்டு மதுரை லஞ்ச ஒழிப்பு துறையில், கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி தனிப்புகாரை நேரில் கொடுங்கள் என கேட்டுக்கொண்டார். எனக்கும் புகார் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே, என்னிடம் எனது பெயருக்கும், எனது மனைவி பெயருக்கும் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்து, கிடைக்க ஏற்பாடு செய்து தருவதற்காக என்னிடம் ரூ.4,000/- லஞ்சம் கேட்கும் வேடர்புளியங்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகார் மனுவுடன், நாங்கள் பத்திர பதிவு செய்த திருப்பரங்குன்றம் சார்பதிவக ஆவண எண்.1427/2026, எனது மனைவி சாதனா பெயரில் மட்டும் உள்ள பட்டா எண்.4808, நான் 30.07.2026-ம் தேதி பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்த விண்ணப்ப எண். 2026/0103/24/041710, நான் 01.09.2026-ம் தேதி பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்த விண்ணப்ப எண். 2026/0103/24/049491 ஆகியவற்றின் நகல்களை

இணைத்துள்ளேன். மேலும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. யாசின் பானு அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.4,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு Sd/-XXXX (R.Madhumithran) 3/9/26

Sir, Received the complaint on 03.09.2026 at 09:30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr. No. 12/2026 u/s 7(a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 10:30 hrs and took up investigation. Sd/-XXXX (C.Jeyapriya) 03.09.2026 Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.R.Madhumithran, S/o.Ramachandran, 18A, 2nd cross street, Kurinji Nagar, Thirunagar, Madurai along with Xerox copies of 1) Doc. No.1427/2026 of Thirupparankunram Sub Registrar Office, 2) Patta No.4808 dated 16.04.2025, 3) Online Patta Name Transfer Application No.2026/0103/24/041710 dated 30.07.2026, 4) Online Patta Name Transfer Application No.2026/0103/24/049491 dated 01.09.2026 are herewith enclosed and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

C. Jeyapriya 3/9/2026

(C. Jeyapriya)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.